


கற்றல் முகாம்

# கட்டுரை எழுதுதல்

07.02.2014

# தலைப்பைத் தேர்ந்தெடுத்தல்

- எல்லா தலைப்புகளையும் கூர்ந்து படித்தல்
- சரியான தலைப்பைத் தேர்ந்தெடுத்தல்
- முக்கியச் சொற்களை/தொடர்களை, கட்டளைச் சொற்களை அடிக்கோடிடுதல்
- தலைப்பைப் பிரித்துப் பார்த்தல்



# படிநிலைகள்

- திட்டமிடுதல் - 10 நிமிடம்
- எழுதுதல் - 50 நிமிடம்
- சரிபார்த்தல் - 10 நிமிடம்

# படிநிலைகள்

திட்டமிடுதல் (10 நிமிடம்)

# கருத்துகளுக்கு வலுவூட்டுதல்

- **மேற்கோள் & இனிய தொடர்கள் பயன்பாடு**

  பழமொழி, திருக்குறள், பாடல் வரி, மரபுத்தொடர், இணைமொழி, உவமை, பொன்மொழி, செய்தித்தாள்களில் வெளிவந்த ஆய்வு, கணக்கீடுகள் (statistics)

  குறிப்பு: அளவாக, பொருத்தமாகப் பயன்படுத்துதல்

# மொழிநடை

- கருத்துத் தெளிவு, எளிய நடை
- சிறு வாக்கியங்களாக எழுதுதல்
- இணைப்புச் சொற்கள், அருஞ்சொற்களைப் பயன்படுத்துதல்
- பிழையின்றி எழுத முயற்சி செய்தல்
- கவனம்: எழுத்துப்பிழை, சொற்பிழை, இலக்கணப் பிழை, ஒற்றுப்பிழை, வாக்கிய அமைப்பு, நிறுத்தற்குறி

# கட்டுரையின் அமைப்புமுறை

- முன்னுரை
- பொருளுரை
- முடிவுரை

# முன்னுரை

- வாசகரை மேலும் படிக்கத் தூண்டுதல்
- இனிய தொடரைக் கொண்டு தொடங்குதல்
- தலைப்பை அறிமுகம் செய்தல்
- முக்கியச் சொற்களையோ தொடர்களையோ நீங்கள் எவ்வாறு புரிந்து கொண்டிருக்கிறீர்கள் என்பதை வரையறை (define) செய்தல்
- தலைப்பை அணுகும் முறையைக் கூறுதல்

# பொருளுரை

- 3 முதல் 4 பத்திகள்
- 5 கருத்துகளுக்குக் குறையாமல் எழுதுதல்
- கருத்துகளை முக்கியத்துவத்தின் அடிப்படையில் முதலிலிருந்து வரிசைப்படி எழுதுதல்
- உதாரணங்களைச் சான்றுகளாகத் தருதல்

# முடிவுரை

- முன்னுரையோடு தொடர்புபடுத்துதல்
- கருத்துகளைத் தொகுத்துரைத்தல்
- வாசகரைச் சிந்திக்கத் தூண்டுதல்
- கட்டுரையை வாசிப்பவர்களின் மனத்தில் உங்கள் கருத்தை நிலைநிறுத்துதல்

# தலைப்பு வகை

- அனுபவம்
- விளக்கம்
- கருத்துரை

# அனுபவக் கட்டுரை

கொடுக்கப்பட்டுள்ள உதவிக் குறிப்புகளைப் படிக்கவும்

# விளக்கக் கட்டுரை

- கருத்துகளை நிரல்பட எழுதுதல்
- கருத்துகளை எடுத்துக்காட்டுகளுடன் திறம்படச் சொல்லுதல்
- சொந்த அனுபவங்களை எழுதக்கூடாது
- கதை வடிவில் எழுதக்கூடாது

# கருத்துரை கட்டுரை

- இவ்வகைக் கட்டுரையில் வெறும் கருத்துகளை மட்டும் தொகுத்து எழுதுதல் கூடாது
- தலைப்பையொட்டிய உங்கள் கருத்தை முன்னுரையில் நிலைநாட்டுதல்
- 3 அணுகுமுறைகள்
- தலைப்பை முற்றிலும் ஆதரித்து எழுதுதல்/
- தலைப்பை முற்றிலும் மறுத்து எழுதுதல்/
- தலைப்பை ஆதரித்தும் மறுத்தும் எழுதுதல்

மாதிரி வினா

# கவனத்திற்கு...

- சரியான வினா எண்ணை எழுதுதல்
- அகராதியைப் பயன்படுத்துதல்
- 5-6 பத்திகள் எழுதுதல்
- கட்டுரையை எழுதுவதற்கு இடையில் தலைப்பை மீண்டும் மீண்டும் வாசித்தல்
- 200 சொற்களுக்குக் குறையாமல் எழுதுதல்

# கவனத்திற்கு...

- வளவள என்று எழுதுவதைத் தவிர்த்தல்
- ஒரே கருத்தை மீண்டும் எழுதுவதைத் தவிர்த்தல்
- கருத்துக்குத் தரும் முக்கியத்துவத்தை மொழிக்கும் தருதல்
- அடித்தல் திருத்தல் இல்லாமல் தெளிவாக எழுதுதல்

# தேர்வுக்குத் தயார் செய்தல்

- மாதிரிக் கட்டுரைகள் வாசித்தல்
- மேற்கோள்கள், இனிய தொடர்களை மனப்பாடம் செய்தல்
- அடிக்கடி செய்யும் பிழைகளைக் கவனத்தில் கொள்ளுதல்
- சில கட்டுரைத் தலைப்புகளைத் தேர்ந்தெடுத்துக் கருத்துதிர்ப்புச் செய்தல்

சந்தேகங்கள்?